# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.84/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G.செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 06.08.2022**

**பெயர் - குமார்**

**த/பெ - முத்து**

**வயது - 45**

**சாட்சி - PW1**

**ஊர் - மெதூர்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.26 a.m.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் இவ்வழக்கின் 2ம்வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பட்டா எண் 153ன் அசல் வாசா ஆ 1 ஆகவும், 2017 - 2018 வருடங்களுக்கான வீட்டுவரி ரசீது முதல் வாதியின் பெயரில் உள்ளது வாசா ஆ 2 ஆகவும், 2016 - 2017 வருடங்களுக்கான வீட்டுவரி ரசீது மூன்றாம் வாதியின் பெயரில் உள்ளது வாசா ஆ 3 ஆகவும், மின்சார வெள்ளை அட்டையின் சர்விஸ் கனெக்சன் எண் 088 001 418 இரண்டாம் வாதியின் பெயரில் உள்ளது அசல் வாசா ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வழக்கறிஞரின் அறிக்கை நீ.ம.சா.ஆ 2 ஆகவும், நிலஅளவையர் தாக்கல் செய்த புலப்படம் மற்றும் அடங்கல் பதிவேடு நீ.ம.சா.ஆ 3 (3 பக்கங்கள்) ஆகவும், நீல அளவையர்

அறிக்கை நீ.ம.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 11.40 a.m.**